



# அமரர் இரகுநாதன் இராசமணி

அவர்களின் பூவுலக பிரிவு குறித்த

## தெய்வீக மணி மாலை

## முதலாம் ஆண்டு நினைவு மலர்

**09.06.2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும்
இல 115, D 10, உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

இரு மரபும் தூய தனிநாயக முதலியார்
வழித்தோன்றல்

# அமரர் இரகுநாதன் இராசமணி

அவர்களின் பூவுலக பிரிவு குறித்த

## தெய்வீக மணி மாலை

## முதலாம் ஆண்டு நினைவு மலர்

09.06.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"**

அன்புத் தாயே ! அம்மா ! கொடிய
யுத்தத்தில் உன்னை காத்து
வந்தோம் என ஆறுதல் கொண்டோம்
உலகையே உலுக்கிய பெரும் தொற்று நோய் வந்து
நொடியில் உன்னைக் காவு
கொண்டதே ! பேறினும் பெரும்
பேறாய் எம் வாழ்வில் நீ
வந்தாயம்மா ! பெருவாழ்வு
நீ வாழ்வாய் என நினைத்திருந்தோம்
நீறாகிப் போனதம்மா எம் கனவு
எம் கண்ணீர் துளிகளை
தெய்வீக மணி மாலையாக்கி
இந்நினைவு மலரை
உங்கள் காலடியில் சமர்ப்பணம்
செய்கின்றோம்



**ஓம் சாந்தி, ஓம்சாந்தி, ஓம்சாந்தி**

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மலர்வு 01 - 01 - 1942

உதிர்வு 21 - 05 - 2021

# அமரர் இரகுநாதன் இராசமணி

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

சீரார் பிலவவில் செப்பாரும் வைகாசிப்
பேரார் பூர்வத் தசமியே – ஊரார்
உவக்கும் இராசமணி உத்தமியாள் தானும்
சிவனடியே சேர்ந்த திதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாக்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணியின் கனிந்து.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவர் என்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர் காண்பலவேடர்
நோயினும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞானம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வனே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ (து) இனியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருபல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
இறவா நீ ஆடும்போது உன்னடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் இரகுநாதன் இராசமணி அவர்களின் வாழ்வும் வளமும்

சிவபூமி என்று திருமூலரால் சிறப்பாக அழைக்கப்பட்ட ஈழமணித் திருநாட்டின் வடதிசையில் செந்தமிழ் கொஞ்சி விளையாடும் யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மேற்கில் அமைந்த பசுந்தீவு, மூலிகைத் தீவு என அழைக்கப்படும் நீண்ட பரப்பளவும், நீளமானதும், நீண்ட ஆயுளுடைய நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவில் அறிஞர்களும், கவிஞர்களும் நிறைந்த கிழக்குப் பகுதியில் இருமரபும் தூய தனிநாயக முதலியார் வழித்தோன்றல் குட்டிப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதிகளின் தவப்புதல்வியாக கடைக்குட்டி மகள் இராசமணி அவர்கள் 01.01.1942 இல் பிறந்தார்.

அன்புடன் பழகும் நற்குணமும், உறவுகளை அரவணைக்கும் உயர் பண்பும், பெற்றோரை மதிக்கும் பிள்ளையாகவும், பத்து உடன் பிறப்புகளுக்கும் பத்தரைமாற்றுத் தங்கம் போல் அண்ணன்களின் அக்காக்களின் அன்பு சகோதரியாய் குடும்பத்தில் மகிழ்வுடன் வலம் வந்தார். வானத்தைப் போல படம் போல் ஆறு அண்ணன்கள், நான்கு அக்காக்களின் கடைசி தங்கை இவர்.

அமரரின் ஆண் சகோதரர்கள் வரிசையில் கடமையே கண் எனும் பெரியண்ணா கந்தையா, இவரின் கட்டளைக்கு அமைய காடு வெட்டி களனியாக்கி சகோதரிகளை கரை சேர்த்த ஆசையண்ணா இராமநாதன், நாளும் தங்கை நலன் விசாரிக்கும் நல்லுள்ளம் கொண்ட நாகலிங்கம், துன்பமென்றால் பறந்து வரும் தங்கையில் உயிரான தர்மலிங்கம், மறைந்தும் தங்கை மனதில் மறையா உருவம் மயில்வாகனம், பாசமலர் பட கதாநாயகன் போல தங்கையே உலகம் என சுற்றிவரும் பரமலிங்கம் என்பவர்களுடன், பெண் சகோதரிகளான அன்பு நிறைந்த அக்கா அன்னப்பிள்ளை, பாசத்தின் அகராதி நாகம்மா, துன்பத்தில் தோள் கொடுக்கும் பொன்னம்மா, அன்புத் தோழிபோல் அருகிருந்து அறிவுரைகள் கூறும் பராசக்தி எனும் நான்கு சகோதரிகள் நடுவில் பூத்த அழகிய மலர் இவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதர சகோதரிகளின் வாழ்க்கைத்துணைகளாக இணைந்துகொண்ட பொன்னம்மா, தெய்வானைப்பிள்ளை, சின்னம்மா, அந்தோனியாப்பிள்ளை, அன்னக்கிளி, செல்லம், கைலாயபிள்ளை, நாகேந்திரம், சுப்பிரமணியம் ஆகியோரிடம் மைத்துணி மைத்துணர் போல் அல்லாது அவர்களின் குழந்தை போன்ற கடைக்குட்டி மணி செல்லப்பிள்ளையாகவும், அனைவரது வீட்டுக்கும் அடிக்கடி சுற்றிவந்து அனைவரது பிள்ளைகளுடனும் மிகுந்த பாசம் கொண்டு பழகியவர். அவர்களது தேவைகள் அறிந்து தானே சென்று உதவிகள் புரிந்து எல்லோரினதும் உள்ளங்களிலும் உயர்ந்த இடம்பிடித்தவர். இன்றும் என்றும் அவர்களின் மனதில் அவர் நினைவுகள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இவரது மணப்பருவத்தில் உறவினரான சகோதரர்கள் மனதுக்கு பிடித்த நெடுந்தீவு மேற்கு கணபதிப்பிள்ளை குஞ்சாச்சிபிள்ளை தம்பதிகளின் கடைசிப்புதல்வன் இரகுநாதன் என்பவரை பெற்றோரின் சம்மதத்துடன் கரம் பிடித்தார். இருவரும் கருத்தொருமித்த தம்பதிகளாய் இல்லறம் எனும் நல்லறத்தை மகிழ்வுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் சிவநகர் எனும் ஊரில் நடாத்தி வந்தார்கள். கணவர் இரகுநாதன் இவரும் மக்கள் மனம் வென்ற நல்லுள்ளம் படைத்தவர் ஈகையில் இத்தம்பதிகளுக்கு நிகரில்லை.

இவர் சிறந்த விவசாயி மட்டுமல்ல சிறந்த ஓர் கல்விமானும் ஆவார், பிள்ளைகளின் உறவினர் பிள்ளைகளின் கல்விக்கு வழிகாட்டியாய் வாழ்ந்தவர். தமிழ் ஆங்கில அறிவை சிறுவயது முதலே ஊட்டி வளர்த்தவர். இன்றும் பல உத்தியோகத்தில் இருக்கும் உறவுகள் இவர் பெருமையை கூறி மகிழ்வார்கள். ஊர் போற்றும் உத்தமனாய் வாழ்ந்தவர். இருவரும் தம் இருகுடும்ப உறவுகளையும் நேசமுடன் அரவணைத்து வாழ்ந்தனர். இவர்களின் சிவநகர் இல்லம் உறவுகள் கூடிவாழ்ந்த ஓர் அன்பாலயம்.

கணவரின் சகோதரர்களான இராமலிங்கம் , அன்னப்பிள்ளை, கற்பகம், காமாட்சி, செங்கமலம், பராசக்தி ,குமாரசாமி, குணநாயகம் ஆகியோருடனும் அவர்களது வாழ்க்கை துணைகளுடனும், அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுடனும் அன்போடும் பரிவோடும் பழகியவர், இருவீட்டு உறவுகளும் கூடியிருக்கும் மகிழ்ச்சி நிறைந்த தமது வீட்டிலே விவசாயமும் செய்து வந்தனர். பலருக்கு விவசாயம் சொல்லிக் கொடுத்தனர். உறவுகளின் சுப காரியங்களை தாமே முன்னின்று நடாத்தி வைத்தனர்.

இவர்களின் இல்லற பயணம் இனிதே சிறக்க குழந்தை செல்வங்களாக மூத்த புதல்வனாக தாயின் செல்லப்பிள்ளை, சொந்தங்களின் சொத்து, சண்முகலிங்கம் (செல்வா), தாயின் மறுகரம் தந்தையாய் காப்பவன் தவலிங்கம் (வவா), பெண்பிள்ளை தாய் போல் பாசம் காட்டும் ,பண்பான மூத்த மகள் சந்திரகுமாரி (பவானி), விளையாட்டுத்துறை வீரன், சிறந்த தமிழ் பேச்சாளன், தாயின் செயல் வீரன் சிவலிங்கம் (சிவன்), மருத்துவம் கற்றவன், திட்டமிடலில் சிறப்பானவன், உழைப்பே உயர்வென உயர்ந்தவன் பேரின்பலிங்கம் (றோமியல்), தாய் என்றும் போற்றும் தங்கமகன் , காலை, மாலை தாய் குரல் தொலைபேசியில் கேட்டு மகிழும் பாசப்பிள்ளை உதயலிங்கம் (துரை), எப்போதும் தாய் அருகிருக்க ஆசைப்பட்ட ஆருயிர் மகன், மக்கள் மனம் வென்று ,மண்ணிற்காய் மடிந்த பிள்ளை காசிலிங்கம் (காந்தரூபன்), தாயின் அன்பு கட்டளையே சாசனமாக ஏற்றுக்கொள்ளும் மகள் கவிப்பிரியா(கவி), தாயின் பணிவிடைகள் செய்ய பிறந்த தவப்புதல்வன், தாய் அழைத்த உடன் அருகில் வந்து நிற்கும் கடைசி மகன், கண்மூடும் போதும் கரம் பிடித்திருந்தவன் புவிராசலிங்கம் (புவி). இவர்கள் அமரர் பெற்ற வரமான வளங்கள் தாய் போல் தாய் நாட்டையும், தாய் மொழியையும் தமிழ் பண்பாட்டு விழுமியங்களையும்,போற்றி பாதுகாக்கும் நற்புதல்வர்கள்.

எப்பொழுதும் பிள்ளைகள் நலனில் ஆர்வம் கொண்டவர், இதனால் இவரது வாழ்நாளில் இவர் சுமந்த சுமைகள் ஏராளம். சிறுவயதில் இருந்தே உழைப்பும், ஊக்கமும் கொண்டவர். ஒவ்வொரு நொடியும் ஓய்வில்லாது உழைத்தவர். தனது பிள்ளைகள் தலையில் வைத்த எண்ணைக்கும், அவர்களுக்கு அள்ளி வார்த்த தண்ணிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவேயில்லை. என்றும் குழந்தை வளர்ப்பில் இவர் PHD முடித்தவர் என்றும் அயலவரும், உறவினரும் கூறுவார்கள். தன் பிள்ளைகள் போன்றே தனது சகோதரங்களின் பிள்ளைகள் மீதும் தனது கணவரின் சகோதரர்களின் பிள்ளைகள் மீதும் அக்கறையும் அன்பும் கொண்டவர், இதனால் கடந்த காலங்களில் இவரது வீடு உறவுகள் நிறைந்திருப்பதும் பல உறவுகளின் மகிழ்வான பொழுது போக்கிடமாகவும் விடுமுறை என்றால் விரும்பி வரும் இடமாகவும் இருக்கும்.

பிள்ளைகள் வளர்ந்து அவரவர் பணிகளை சிறப்பாக ஆற்றிட அன்னையின் மனம் மகிழ்ந்தது. எண்ணம் போல் வளர்ந்த குழந்தைகள் மண வயதை அடைந்ததும் அவர்களது மனம் அறிந்து பிள்ளைகளின் சந்தோசமே தன் சந்தோசம் என பண்பினில் சிறந்து, அன்பினில் உயர்ந்த இணைகளாக சண்முகலிங்கம் செல்வாவிற்கு சுகிர்தராணி சுகியையும், தவலிங்கம் வவாவிற்கு மதிபவானி பவானியையும், சந்திரகுமாரி பவானிக்கு சாந்ததேவன் சாந்தனையும், சிவலிங்கம் சிவனிற்கு ஜெனார்தினி சசியையும், பேரின்பலிங்கம் றோமியலுக்கு சுதர்சினி சுபாவையும், உதயலிங்கம் துரைக்கு காஞ்சனா சுஜாவையும், காசிலிங்கம் காந்தரூபனிற்கு அருணாவையும், கவிப்பிரியா கவிக்கு முகிலனையும், கடைசி மகன் புவிராசலிங்கம் புவிக்கு ஜனுப்பிரியா ஜனுவையும் முழு மனதுடன் மணமுடித்து வைத்து அவர்களின் சிறந்த வாழ்வுகண்டு மன நிறைவு கொண்டார்.

பிள்ளைகள் போலவே அன்பு காட்ட கிடைத்த பேரப்பிள்ளைகளாக கிறிஸ்ரினா, செலஸ்ரினா, சரண்யா, சாளினி, தனுசன், ஜெயப்பிரகாஷ், துஷந்திகா, சஞ்சிகா, மிதுர்சிகா, சோபிதன், காவியா, மதுசன், தாருசன், மிதுர்சன், காந்தரூபன், சேயவன், அட்ஷரன். என்பவர்களும் செல்வாவின் மூத்த புதல்வியின் மகளாக வந்துதித்த நிவினாவால் அன்பு பூட்டியுமாகி மகிழ்வோடும் மன நிறைவோடும் வாழ்ந்து வந்தார்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து தனது சகோதரியின் காணியில் தற்காலிக குடிசையில் வசித்தபோது 1997.12.08 அன்று நோய் தாக்கம் காரணமாக கணவர் உயிரிழந்தார்.

பிள்ளைகளுக்காக பல துன்பக் கடல்கள் கடந்தவர். தனது சிறகுகளுக்குள் வைத்து எப்பொழுதும் தன் குஞ்சுகளை காப்பவர். இரும்பு சிறைகளை கூட தன் இழகிய மனதால் திறந்து தன் பிள்ளையை மீட்டவர். குழந்தைகளுக்காய் இவர் பாதங்கள் நடந்த தூரங்கள் அளவிடமுடியாதவை, தோள்கள் தாங்கிய பாரங்கள் எழுத்தில் கூறிடமுடியாது. இவர் கண்கள் வடித்த கண்ணீர் ஏழுகடல்களை நிறைத்திருக்கும். கொடிய யுத்தததில் தனது உயிரான பிள்ளையை 19.02.2009 அன்று நாட்டுக்காய் இழந்தபோது அவர் அடைந்த வேதனை சொல்லிட முடியாது, புறநானூற்று தாய் போல் துடித்தாலும் ஏனைய பிள்ளைகளின் பாதுகாவலராய் வாழவேண்டும் என்பதற்காக வாழ்ந்தார்.

இருந்தாலும் கடந்த காலத்தில் அவர் சுமந்த சுமைகள், மற்றும் இடப்பெயர்வின் உடமை அழிவுகள், உயிர் இழப்புக்களின் வலிகளில் இருந்து மீண்டுவருவதற்கு அவரால் முடியவில்லை. இதன் காரணமாக பெரும் மன தைரியம் கொண்ட அவரால் முன்னர் போன்று சுறுசுறுப்பாக இயங்க முடியாவிட்டாலும் யாருக்கும் சுமையாக இருக்க கூடாது எனும் மன வைராக்கியத்துடன் தனது ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் கொண்டு வாழ்ந்து வந்தார்.

முதுமைக் காலத்தில் சகோதர்கள் மூவர் தொடராக குறுகிய காலத்தில் இறையடி சேர்ந்த துயர் தாங்காது துவண்டிருந்த வேளையில், சம காலநிலை தொற்று காரணமாக ஏற்படுத்தப்பட்ட பயணத்தடைகள் காரணமாக மனதளவில் மிகவும் சோர்வடைந் திருந்தார், ஆனாலும் அனைவருடனும் எந்நேரமும் கைபேசி தொடர்பில் இருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20.05.2021அன்று காலை கூட யாழ் இருந்து வந்த மகனுடன் உற்சாகமாக உரையாடி உணவு அருந்தி அனுப்பி வைத்தார். மாலை நெருங்கி வரும் நிலையில் உடல் நிலை சோர்வடைந்து எழுந்து இருக்க முடியாத நிலைகண்டு தனியார் மருத்துவ மனைக்கு அழைத்து சென்ற போது என்ன செய்கிறது என்று கேட்டக "வீட்ட போவம்" என்று தானாக எழுந்து நின்றார். அவ்வாறே இரவு பொழுது கடந்து செல்ல உடல் தளர்வும் அதிகரிக்க 21.05.2022 அன்று அதிகாலை பிள்ளைகள் அனைவரும் அன்னையை தேடி ஓடி வர, தொலைவில் இருக்கும் மகன் தொடர்பில் காத்திருக்க, அருமை உடன் பிறப்பு பாதிவழி வந்து நிற்க, எங்கிருந்தோ வந்த பெருமழையும், இடி மின்னலும் வான் பிளக்க செய்வதறியாது நிலைகுலைந்து நின்றபோது உடனிருந்த வைத்தியர் அறிவுரைக்கு அமைவாக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு செல்லும் நிலை ஏற்பட்டது.

மருத்துவ மனைக்கு போகும் நிலை வரக்கூடாது என தினம் பிராத்திக்கும் இவர் மருத்துமனை வாயிலில் செல்லும் போது ஓலைதனைப் புரட்டிய சித்திரபுத்திரனார் "உன் கடமை முடிந்தது! உன்னை விரும்பி அழைக்கின்றேன்" என்று சொல்லிட தலைமாட்டில் தலை மகனும் கால் மாட்டில் கடைசி மகனும் மருத்துவம் தெரிந்த மகன் செய்வதறியாது மனம் வெம்பி கதறியழ மருத்துவமனை வாயிலிலே தான் செய்த புண்ணியங்களின் பயனாக இவர் பூதவுடல் பூமிதொட புகழுடல் தனைப்பெற்று 21.05.2021 காலை 10.30 மணிக்கு மாணிக்க விநாயகன் திருப்பாதம் அடைந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா எனும் மூன்றெழுத்து மந்திரம்

எங்கள் குல மாதாவே
தர்மத்தின் வழிகாட்டியே
உண்ணாமல் உறங்காமல்
உள்ளமெல்லாம் எம்
நினைவாய் வாழ்ந்தாயே.

ஆழ்கடலில் முத்தெடுத்தாய்
முத்தான பிள்ளைகளை
பெற்றெடுத்தாய் அம்மா
மூச்சடங்கி நின்ற போது
பேச்சடங்கி நின்றோம் அம்மா.

கன்னத்தில் முத்தமிட்டு
கதைகள் பல சொல்லி
நல் எண்ணத்தை எமக்குள்
விதைத்து உள்ளத்தை உருக விட்டு
ஏனம்மா மறைந்து சென்றாய்.

புண்ணியம் செய்ததால்
பூவுலகம் சென்றாயோ
பக்கத்தில் நீயிருந்து
பக்குவமாய் பார்த்தாயே
இராப்பகல் பாராது
மெழுகாக உருகி
ஒளியாக இருந்தாயே.

உருவம் அறியா கருவிலும்
எம்மை காதல் செய்தவளே
உயிர் பிரிந்து
உடல் மறைந்தாலும்
உம் ஆத்மா எம்மை
வாழ வைக்கும் இவ் உலகை
அன்பால் ஆள வைக்கும்

ஒத்த உசிருக்குள்ள எத்தனையோ
ஆசைகள் நீ சுமந்தாயே
அத்தனையும் உனக்காக
அல்ல எமக்காக தானே அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் தந்தாய் உறவுகள் தந்தாய்
அறம் தந்தாய் மொழிதந்தாய்
மனை தந்தாய் மருத்துவம் தந்தாய்
பெறுவதற்குரிய பெரும்
பேறுகள் எல்லாம் தந்தாய்
உங்கள் உயிர் காக்கும்
வழி சொல்ல மறுத்தாய் அம்மா

துடித்து நிற்கின்றோம்
துடுப்பிழந்த கட்டுமரம் போல்
அடுத்தவர் பசியறிந்து
அன்னமிடும் அட்சய பாத்திரமே
உன்னை மீட்பதில் தோற்றுப் போன நாம்
கண்ணீரில் கரைந்து கதறி அழுகின்றோம்.

நம் வாழ்வின் வசந்தகாலம்
நாம் வாழ்ந்த கடந்த காலம்
மீண்டும் வர வேண்டும்
எழுந்து வாருங்கள் அம்மா.

கதறியழுகின்றோம் கண்திறந்து பாரீரோ
வேதனை தணலில் வெந்து தவிக்கின்றோம்
ஒருமுறை வந்து அமுதூட்டுவீரோ தாயே

காலை மாலை காலம் தவறாது
அலாரமாய் அழைத்த அம்மா உன் கைபேசி
அழைப்பு கிடைக்குமா அம்மா

எம் மூச்சுக் காற்று முழுவதும்
நிறைந்து நிற்கும்
மூன்றெழுத்து மந்திரமே அம்மா

**ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

***பிள்ளைகள், மருமக்கள்,***
***பேரப்பிள்ளைகள்,***
***பூட்டப்பிள்ளைகள்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# சிவபுராணம்

காப்பு

**திருச்சிற்றம்பலம்**

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகமென்னுந்தேன்.

**திருச்சிற்றம்பலம்**

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம்ஆகி நின் றண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகனநேகன் இறைவன் அடி வாழ்க!

வேகங் கெடுத் தாண்ட வேந்தன் அடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவர் உள் மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங் குவிவா ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!

ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி!
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளும்மலை போற்றி!
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்
சொல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயாவென வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங் கழிய நின்ற மறை யோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார முதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாலிக்கும் ஆரியனே
நேய அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே அவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட் கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனே ஓ வென்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு பதிகம்

வேய் உறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை இவை பார்பிலங்க
எருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல் சூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்களவைதான்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளிநீறனிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்சமான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

மதிநுதன் மங்கையோடு வடவா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடு நோய்களான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சணி கண்ட னெந்தை மடவவாள் தானோடு
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்றி கொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுனரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூதமவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
உளமே புகுந்த அதனால்

வாள்வரி அதளதாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வள்ளி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநள்மங்கை ஒருபாகமாக
விண்டயேறு செல்வனடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அனிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தென்று விடைமேலிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன் றனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலபல வேடமாடும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடெருக்கும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர்
வருகாலமான பலவும்
ஆலைகடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேடவிகிர்தன்
மத்தமும் மதியும் நாக முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொட மணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில் கொள் ஆலை சென்நெல் துள்ளி
வளர் செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞானமுனிவர்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல்மாலை போதும் அடியார்கள் வானில்
அரசாள்வார் ஆணைநமதே.

திருச்சிற்றம்பலம்

*வெட்டிப் பேச்சினால் பயன் கிடையாது. மக்களுக்குத் தொண்டு செய்வதில் தனித்திறமையும், பற்றும் கொண்டு விளங்குங்கள். உங்கள் உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் சேவை எண்ணம் மிளிரட்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# கந்த சஷ்டி கவசம்

*காப்பு*

நேரிசை வெண்பா

சிவமயம்

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

## குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச்சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவ ண பவனார் சடுதியில் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணபவ வருக வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வா
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவா காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறியை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண் வேல்காக்க
பின்னகை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் க்ண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப்பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ் சனமும் ஒரு வழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருத்தலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துக் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நாஇருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலங்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்தநாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட் சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்து வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குரபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்!.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# லிங்காஷ்டகம்

ப்ரஹ்ம முராரிஜ ஷுரார்சித லிங்கம்
நிர்மல பாஷு த சோபித லிங்கம்
ஜன்மஜதுக்க விநாசித லிங்கம்
தத்பிரணமாகி ஸாதாசிவ லிங்கம்

தேவ முனிப்பிரவார்ச்சித லிங்கம்
காம தஹம் கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வதஷு கந்திஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத்பிரணமாமி ஸ்தாசிவ லிங்கம்

கனகமகாமணி பூஜித லிங்கம்
பணபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ யக்ஞ விநாசன லிங்கம்
தத் பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கய ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாவ விநாச லிங்கம்
தத் பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவன பக்தி ப்ரபாகர லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்டதளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்திர விநாசித லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுர்வர பூயித லிங்கம்
ஸரவண் புஸ்ப ஸதாசிவ லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கௌரிக்காப்பு



### விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்றமொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வராமற்கா

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லலோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லலோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீநோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டு விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக்காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஒட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே!
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றி விட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்துவிடும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவிடும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளம்.

திருச்சிற்றம்பலம்

அராஜகச் செயல்கள் பெருகுவதற்கு காரணமே மனஉறுதியின்மைதான். அஹிம்சைநெறியுடைய நாட்டிற்கு காவல்துறை தேவையில்லை. தொண்டர்படையே போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



குமரகுருபரர் அருளிய

# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின் பதந்தாங்க
வென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்தாக
வுண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே. 01

நாடும் பொருட் சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலா வல்லியே. 02

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுதார்த்
துன்னருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
வுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலா வல்லியே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலா வல்லியே. 04

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தலராததென்னே
நெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு கமழும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலா வல்லியே. 05

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழு தெளிதெய்த
நல்காய் எழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்
சகல கலா வல்லியே. 06

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும்படி நின் கடைக் கண்ணல்கா
யீயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பாலமுதந்
தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோ திம்பபேடே
சகல கலா வல்லியே. 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விறபனமு மவதானமுங்

கல்வி சொல்லவல்ல

நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய்

நளினா சனஞ்சேர்

செல்விக் கரிதென்றொரு காலமுஞ்

சிதையாமை நல்குங்

கல்விப் பெருஞ்செல்வப் பேறே

சகல கலா வல்லியே. 08

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்

ஞானத்தின் தோற்றமென்ன

நிற்கின்ற நின்னை நினைப்பவர்

யார்நிலந் தோய்புழைக்கை

நற்குஞ் சரத்தின் பிடி யோ

டரசன்ன நாணநடை

கற்கும் பதாம்புயத் தாயே

சகல கலா வல்லியே. 09

மண்கண்ட வெண்குடை கீழாக

மேற்பட்ட மன்னருமென்

பண்கண் டளவிற் பணியச் செய்

வாய் படைப் போன் முதலாம்

விண்கண்ட தெய்வம் பல் கோடியுண்

டேனும் விளம்பிலுன் போற்

கண்கண்ட தெய்வ முளதோ

சகல கலா வல்லியே. 10

முற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

போற்றி வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிகழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறை உறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 01

அருணண்இந் திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற்று அண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள் நிதி தர வரும் ஆனந்த மலையே
அலைகடலே பள்ளி எழுந்தருளாயே. 02

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளினை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய் எமக் கெளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 03

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டு கொண்டு இன்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருள்வாயே. 04

பூகங்கள் தோறும்நின் றாய்எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும் அரியாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே 05

பப்பற வீட்டிருந்து உணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார் அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின
வணங்குகின்றார் அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலரும்கண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே 06

அது பழச்சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கெழுந்தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமுதே பள்ளி எழுந்தரு ளாயே 08

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉ ள தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேருவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே 09

புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப்பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தே பள்ளி எழுந்தரு ளாயே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்படக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதெ வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல் வாழ்த்திய வாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேன் நின்றுண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
நேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆடேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதன் என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர
புத்தடியோம் புன்மைதீர்த் தாட் கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியர் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

மாலறியா நான்முகனுங் காண மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளே பேசும்
பாலுறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அரிவரியான்
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனே யென்
றொலம் இடினும் உணராய் உணராய் காண்
ஏலக்குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளை வந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந் தின்றோம்
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மை தலையளித்தாட் கொண்டருளும்
வாண்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்

அன்னே இவையும் சிலவோ பல வமரர்
உண்னற் கரியான் ஒருவன் இருஞ் சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனேன்றே வாய்திறப்பாய்
தென்னா வென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங் கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னேஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிய தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னனைப்பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னை பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவா அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேனது ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தான்றன் கோயிற் பிணாப்பிள்ளைகான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதவன் ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப்பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.
மெய்யாய் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தேங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணிறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையெலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவத் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச் சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிசூழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகளும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.

பைங்குவளைக் கார்மரலால் செய்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துருகும்
சங்கச் சிலம்பச் சிலம்பு கலந்தார்பக்
கொங்கைகள் பொங்கக் குடையுங் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதார் குழையாடப் பைப்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்.

ஓரொருகால எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால வாயோவான் சித்தங் களிகூர
நீரொருகால ஓவா நெடுந்தாரை கண்பனிப்புப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொலுவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
வின்னப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித் தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்த் தாடேலோ ரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமாள் உனக்கொன் றுரைபோம்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணப் பாடல்கள்

முத்துநல் நாமம் பூமாலை தூக்கி
        முனைக் குடம் தூபம் நல் தீரம் வைப்பின்
சக்தியும் சோமி யும்பார் மகளும்
        நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரி யும்பார்ப் பரியுங்
        கங்கையும் வந்து கவரி கொண்மின்
அந்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
        ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 01

பூவியில் வார்சடை எம்பி ராற்குல
        பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
        வம்பின்கன் வந்துடன் பாடு மின்கன்
கடவுமின் தொண்டர் புறம்தி லாமே
        குதிமின் தொழுமிஎன்று மேனெங் கூத்தன்
தேவியுந் தானும் வந் தெம்மை யாளச்
        செம் பொன்செய் சுண்ணம் இடித்து நாமே. 02

சுந்தர நீரணிந் தும் மெழுகித்
        தூய பொன் சிந்தி நிதிய ரம்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
        எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் றன் பெருமான்
        ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யான்கொழுநற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
நேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாசவினையைப் பறிந்து நின்று
பாடிப் பொற்கிண்ணம் இடித்து நாமே. 04

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்தெடுக்க வொட்டோம்
செறிவுடைய மும்மறில் எய்த வில்லி
திருவேகம் பண்செம்பொற் கோயில் பாடி
முறுவந்செவ் வாயினீர் முக்கணப்பந்
கடைப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 05

உலக்கை பல வோச்சு வார் பெரியார்
உலகமெ லாமுரல் போதக தென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நான்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருமகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்து நாமே. 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்பத ஆர்ப்பத
தொண்டர் குழாமெழுந் தர்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப் ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 07

வண்டடங் கண்மட மங்கை நல்லீர்
வடுவனை ஆர்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லம்கச்
சேர்த் தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 08

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்து றையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய் குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடச்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிற்றொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 10

மாடு நகைவான் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்வ னந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 11

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போததிக் கண்ணினைப் பொற்றொடிப்தோன்
பையர வலருல் மடந்தை நல்லீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கன்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்டுத்
தன்னுடைக் கேள்வன் மகன்த கப்பன்
தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செம்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவி ரைக்குங்
கந்தைச் சடை முடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே. 14

ஞானக் கடும்பின் தென்னியை பாகை
நாடற் கரிய நலத்தை நத்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புருந்துநித் திக்க வல்ல
கோனைப் பிறம்பதுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பாகன் தடங்கண் மடந்தை நல்லிர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர் நம்மோடு

ஆட்செய்யும் வண்ணங்கள் பாடி விண்மேல்

தேவர் கனாவினுங் கண்டறியாச்

செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்

சேவகம் ஏந்தியவெல் கொடியான்

சிவபெருமான்புரஞ் செற்ற கொற்றச்

சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்

செம்பொன் செம்சுண்ணம் இடித்து நாமே. 16

தேகை மாமலர்க் கொன்றை பாடிச்

சிவபுரம் பாடித் திருச்ச டையமெல்

வாகை மாமதிப் பிள்ளை பாடி

மால்விடை பாடி வலக்கை யேந்தும்

ஊனக மாமழுச் சூலம் பாடி

உம்பரும் இம்பரும் உய்ய வன்று

போகை மாகநஞ் சுண்டல் பாடிப்

பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே. 17

அயன் தலை கொண்டுசென் டாடல் பாடி

அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்

கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்

காலனைக் காலால் உதைத்தல் பாடி

இயைந்தன முப்புரம் எய்தல் பாடி

ஏழை அடியோமை ஆண்டு கொண்ட

நயந்தனைப் பாடிநின் றாடி யாடி

நாதருக்குச் சுண்ணம் இடித்து நாமே. 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென்றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம் மேல்
இட்டு நின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்து நாமே. 19

வேதமும் வேள்ளியும் ஆயி னர்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய் இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய் ஈற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்
காதியும் அந்தமும் ஆயி னாருக்கு
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 20

(திருப்பொற்சுண்ணம் முற்றிற்று)
திருச்சிற்றம்பலம்

நேரம் தவறாமை என்னும் கருவியை உபயோகிப்பவன்
எப்பொழுதுமே கதாநாயகன் தான்
எல்லோருடைய வாழ்க்கையும் வரலாற்றானதில்லை
வரலாறானவர்கள் யாரும் தனக்காக வாழ்ந்ததில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக துதி

## சூரியன்

சீலமாய் வாழச் சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுதந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

## சந்திரன்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சற்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

## செவ்வாய்

சிறப்புறு மண்ணிய செவ்வாய்த் தேவே
குறை விலாது அருள்வாய் குணமுடன்
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு.

## புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபகவானே பொன்னடி போற்றி
பதந் தந்தாள் வாய் பண்ணொலியானே
உதவியே அருளும் உத்தமா போற்றி.

## குரு – வியாழன்

குணமிகு வியாழக் குருபகவானே
மணமுடன் வாழ மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா
கிரகதோஷமின்றிக் கடாஷிசித் தருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுக்கிரன் – வெள்ளி

சுக்கிரமூர்த்தி சுகமிக ஈவாய்
வக்கிரமின்றி வரம் மிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கு அருளே.

## சனி

சங்கடந் தீர்க்கும் சனிபகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சாகா நெறியில்
இச் செகம் வாழ இன்னருள் தா தா

## இராகு

அரவெனும் இராகு ஐயனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
இராகுக் கனியே ரம்மியா போற்றி

## கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாவம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுத் தேவே கேண்மையாய் இரஷி

இவ்வுலக வாழ்க்கையில் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய குணங்கள் எல்லாவற்றிலும் மிகமிக உயர்ந்தது பொறுமை.
எந்த ஒரு செயலைச் செய்யும் போதும் அச்சமில்லாது துணிவுடன் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பிள்ளையார் பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
(பிள்ளை)

ஆற்றங்கரை மீதிலே அரசமரத்தின் நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பிள்ளை)

ஆனை முகம் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர் பக்தர் குறையைத் தீர்ப்பவர்
(பிள்ளை)

மஞ்சளிலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்து எழுத்து மந்திரத்தை நெஞ்சிலாழ்த்தும் பிள்ளையார்
(பிள்ளை)

ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீக்கி வைக்கும் பிள்ளையார்
(பிள்ளை)

அவல்பொரி கடலையும் அரிசி கொழுக்கட்டையும்
கவலையின்றித் உண்ணுவார் கண்ணை மூடித்தூங்குவார்
(பிள்ளை)

கலியுகத்து விந்தைகளைக் காணவேண்டி அனுதினமும்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போலச் சுற்றுவார்
(பிள்ளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் காரிய சித்தி மாலை

பந்தம் அகற்றும் அநந்தகுணப் பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி இருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங் கலைகள் அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை கூரத் தொழுகின்றோம். 1

உலகமுழுவதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும்பொருள் எவன்அவ்
உலகிற்பிறக்கும் விவகாரங்கள் உறாதமேலாம் ஒளியாவன்?
உலகம் புரியும் வினைப் பயனை ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை உவந்து சரணம் அடைகின்றோம். 2

இடர்கள் முழுதும் எவனருளால் எரிவீழும் பஞ்சென மாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால் சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றி கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவுமருப்புக் கணபதி பொன் சரணம் அடைகின்றோம். 3

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத் திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்திநாளும் அறியாமை அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 4

செய்யும் வினையின் முதல்யாவன் செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயமின்றி உளதாகும் அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில் ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யி இறையைக் கணபதியைப் புரிந்து சரணம் அடைகின்றோம். 5

வேதம் அளந்தும் அறிவரிய விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும் விமலன் யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும் நாதன்எவன் எண்குணன் எவன்அப்
போதமுதலைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 6

மண்ணின் ஓர் ஐங்குணமாகி வதிவான் எவன் நீரிடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின் மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான் எவன் வானிடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை அன்பிற் சரணம் அடைகின்றோம். 7

பாச அறிவில் பசுஅறிவில் பற்றற்கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும் பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும் பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத் திகழச் சரணம் அடைகின்றோம். 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# முருகா சரணம்

முருகா சரணம் முருகா சரணம்
முருகா முருகா சரணம் சரணம்

(முருகா)

அன்பர்கள் நேயா அம்பிகை புதல்வா
துன்பமகற்றிடும் சீலா பாலா

(முருகா)

சிவகுமாரா முருகா வருக
பரம புருஷா வரம் தர வருக

(முருகா)

கலங்கா தெனையே காத்திடு முருகா
மலந்தான் அணுகா வரம்தா முருகா

(முருகா)

காவா முருகா கார்த்திகைக் குமரா
வாவா முருகா சாகா வரம்தா
வா வா முருகா வினை தீர்த்திடவே
யோகா முருகா பகை மாற்றிடவே

(முருகா)

பொன்னடி போற்றி பணிந்திடவே
சென்னியில் நின்னடி ஓங்கிடவே
தேடிய நலங்கள் செறிந்திடவே
பாடிய புகழ்கள் மலிந்திடவே (முருகா)

கூடிடும் அன்பர் கும்பிடவே
அன்பாய் அவர்தாள் சூடிடவே
சூடிடவே யான் சூடிடவே
அன்பாய் அவர் தாள் சூடிடவே

(முருகா)

முருகா சரணம் முருகா சரணம்
முருகா சரணம் முருகா சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



**“ எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுஉண்டாம்**
**உய்வு இல்லை செய்நன்றி கொன்ற மகற்கு”**

எங்கள் குடும்ப குலவிளக்கின் ஒளியிழந்த நாம் எல்லாம் செய்வதறியாது நிலைகுலைந்து நின்ற போது உடன் ஓடி வந்து நேரில் ஆறுதல் பகிர்ந்தவர்களுக்கும் தனிமைப்படுத்தப்பட்டு இருந்த எமக்கு மூன்று வேளை உணவுகளையும் அளித்த எம் உயிரிலும் மேலான உறவுகள் நண்பர்களுக்கும், அசாதாரண சூழ் நிலையிலும் இறுதிக் கிரியைகளுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டு உடனிருந்து ஆறுதலளித்த உறவுகளுக்கும், கொட்டும் பனிக்குள் உறைந்து உழைத்த பணத்தில் எம் துன்பம் அறிந்து நிதியுதவியாக அளித்த எம் அன்னையின் அன்பினை மறவாத உறவுகள் நண்பர்களுக்கும், மின்னஞ்சல், முகப் புத்தகம், தொலைபேசி, ஏனைய சமூக வலைத்தளங்கள் ஊடாக அனுதாப செய்தி அனுப்பி வைத்தவர்களுக்கும், பூமாலை, மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செய்தவர் களுக்கும், துண்டுப் பிரசுரங்கள், பதாதைகள் விநியோகித்த அன்பர்களுக்கும், மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதார சேவை பணியாளர்களுக்கும், ஏனைய அரச அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும். இணையத்தில் மரணச் செய்தியை அறிவித்த உறவுகளுக்கும், ஏனைய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வாழ்க வளத்துடன்**

**நன்றியுடன்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ரம்

ஏ, மனமே ஏன் சஞ்சலப்படுகிறாய்? எல்லாம் ஈசன் செயல்
நம் சித்தத்திற்கு இங்கு எதுவும் நடைபெறுவதில்லை
நல்லது கெட்டது இரண்டும் கலந்தது தான் உலகம்
இன்பம், துன்பம் இரண்டும் கலந்தது தான் வாழ்க்கை
பிறக்கும் பொழுது எதுவும் கொண்டு வந்ததில்லை
இறக்கும் பொழுது கொண்டு போவதில்லை
உலகமே மாயை, நடக்கும் நிகழ்ச்சிகள் நாடகம்
சூத்திரதாரி அவன். நாம் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்றோம்
நம் இஷ்டத்திற்கு இந்த உடம்பை எடுத்தோமில்லை
முதல் இறுதி முடிவும் நம் வசமில்லை
நாம் செய்யத்தக்கதெல்லாம் ஒன்று தான்
உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்.
தெய்வம் உண்மை என்று தானறிதல் வேண்டும்
சத்தியவழி நின்று தெய்வபக்தி செய்வதே நமது கடமை.
பகவானை அடையப் பல வழிகள் உண்டு என்னும்
பக்தி வழியே எளிமையானது
இது சாத்திரங்களின் சாரம்.

அன்புக்கரம் பதிப்பகம், 0777373091

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org